(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) திருச்சி சிம்கோ மீட்டர் தொழில் நிறுவனம் குறித்து

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, சிம்கோ மீட்டர் தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்றைக்கு கரெக்டாக 4 மாதம் பூர்த்தியாகிறது. இந்த வேலை நிறுத்தம் செய்வதை சர்க்கார் தலையிட்டு தீர்த்து வைப்பதற்கு பதிலாக காலம் கடத்திக் கொண்டு இருப்பதனால் நிறுவனத்தினுடைய வன்முறைகள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

சிம்கோ மீட்டர்ஸ் முதலாளிகளுடைய ஆயுதம் தாங்கிய குண்டர்கள் டாக்ஸிகளிலே பறந்தனர். They are running riot in Trichy town. இன்றைக்கு காலையிலே நடந்தது இது. இந்த ஆயுதம் தாங்கிய குண்டர்கள் தொழிலாளர்கள் மேலே டாக்ஸியை விட்டு மோதிப் பார்த்தனர். தொழிலாளர் கள் திடீரென்று பின் வாங்கியதால் எந்த விபத்தும் இல்லாமல் தப்பித்து விட்டார்கள். அந்த சம்பவத்திற்குப் பிறகு இரண்டு டாக்ஸியிலே போன குண்டர்கள், ஆயுதம் தாங்கிய குண்டர்கள், தெருவிலே போன சைக்கிளில் போய்க்கொண்டிருந்த இரண்டு பொது ஜனங்கள் மீது டாக்ஸியிலே போய் இடித்திருக்கிறார்கள். அவர்கள் சைக்கிளை விட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள். அவர்கள் மீது ஓடுபவர்கள் மீது சைக்கிள் செயினைக் கொண்டு இந்தக் குண்டர்கள் தாக்கியிருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர் கள் என்று நினைத்துக் கொண்டு இந்தக் குண்டர்கள் தாக்கி யிருக்கின்றனர்—ஆனால் அவர்கள் பொது ஜனங்கள். ஓடுபவர் கள் மீது சோடா பாட்டிலை எடுத்து வீசி இருக்கிறார்கள். அந்த ஊர் ஜனங்கள், பொது மக்கள் தாக்கப்பட்டதை அறிந்த கொதிப்படைந்த உள்ளூர் ஜனங்கள் சுமார் ஒரு நூறு பேர் சேர்ந்து கலெக்டர் பங்களாவிற்குப் போய் எங்களுக்கு ஒழுங்காக, இந்த முதலாளிகளைச் சேர்ந்த குண்டர்களிடம் இருந்து பாதுகாப்புத் தருகிறீர்களா இல்லையா என்று கேட்டுக் கொண்ட பிறகு, அவர் போலீஸ் சூப்பிரன்டெண்டண்ட் அவர் களுக்கு தகவல் கொடுத்திருக்கிறார். இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த அந்த தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சுந்திரராஜன் அவர்கள் இங்கே சபையில் கண்டனம் தெரிவித்திருப்பதில் இருந்தே நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

அது எப்படி பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கேட்டீர்கள். அதற்கு மூன்று காரணங்கள் அரசாங்கம் சம்பந் தப்பட்ட பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கு, மூன்று காரணங்கள் சொல்வேன். ஒன்று, திருச்சி குறிஞ்சி ஓட்டலில்

1979 மார்ச் 5] [திரு. ரா. உமாநாத்]

ரிடையர்டு டி. எஸ், பி. திரு. குப்புசாமி அவர்கள் தலைமையிலே ரௌடிகள் கேங்கின் ராஜு என்பவருடைய தலைமையிலே, அந்த திருச்சி குறிஞ்சி ஓட்டலில் ஒரு தளமே பகிரங்கமாக அமைத்து இருக்கிறார்கள் என்று தகவல் பகிரங்கமாக கொடுக்கப்பட்டிருநதும் அதைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (That was brought to the notice of Government and Police autho-riteis several times.) அது மட்டுமல்ல, அந்த ஓட்டலில் தனியாக ஒரு போலீஸ் ஸ்டேஷன், வேறு எங்கும் இல்லாத அளவுக்கு, ஒரு தனியார் துறை போலீஸ் ஸ்டேஷன் வைத்து இருக்கிறார்கள். பொது ஜனங்களை தாக்கும் குண்டர்களை கைது செய்யவில்லை. அதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. ரௌடிகள் தலைவன் ராஜுவை கைது செய்யவில்லை. ஆனால் பலமான போலீஸ் பாதுகாப்பு அந்த ஓட்டலில் முகாம் போட்டிருக்கும் குண்டர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு, ஏன் அப்படிச் சொன்னால், இரண்டு குண்டர்களைத் தாங்கிய, ஆயுதம் தாங்கிய குண்டர்களை தாங்கிய இரண்டு டாக்ஸிகளை, முன்னாள் டி.எஸ்.பி. திரு. பாண்டியன் கையும் களவுமாகப் பிடித்திருக்கிறார். அதைக் கொண்டு அந்தக் குண்டர்களை ஓட்டலில் இருக்கும் பகிரங்கத் தளத்தையே லிக்விடேட் பண்ணி இருக்கலாம். ஆனால், இன்றைக்கும் அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், அந்த டி.எஸ். பி-ஐ டிரான்ஸ்பர் பண்ணி விட்டார்கள். அரசாங்கத்தினுடைய இந்த நடவடிக்கைகளால் மேலும் ஊக்கம் அளிக்கப்பட்டது குண்டர்களுக்கு. நடவடிக்கை எடுத்த டி.எஸ்.பிக்கு டிரான்ஸ்பர் கிடைத்ததால் எந்த போலீஸ் அதிகாரியும் அவர்களைப் பிடிப்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். யாருக்கும் அந்த தைரியம் இல்லை. They are afraid of doing their duties அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்வதற்கு அஞ்சுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் ஆயுதம் தாங்கிய அந்த குண்டர்களுக்கு, ஓட்டலில் பகிரங்கமாக தளம் அமைத்த ரௌடி கும்பல்களுக்கு பாதுகாப்பு கிடைத்திருக்கிறது—நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளையும் டிரான்ஸ்பர் பண்ணுகிறார்கள். They have made in effective local police officials பொது ஜனங்கள் கலெக்டர் பங்களாவிற்குப் போய் புகார்கொடுத்த பிறகும் அவர்களின் பாதுகாப்பிற்கு எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள். நேரம் அதிகம் இல்லை.

திரு. ரா. உமாநாத் : இதோ முடித்துக் கொள்கிறேன். அந்த ரிடையர்டு டி.எஸ்.பி. குப்புசாமியை கைது செய்யவில்லை, ரௌடிகள் கேங்கின் தலைவன் ராஜுவைக் கைது செய்யவில்லை, ஓட்

டலில் இருக்கக்கூடிய அந்த தளத்தை லிக்விடேட் பண்ண வழி ஏற்பட்டிருந்தும், அதை செய்யவில்லை லோகல் போலீசார். பொது ஜனங்களுக்கு பாதுகாப்புத் தரவில்லை என்ற காரணங்களினால் இது பொது முக்கியத்துவம் வாய்ந்தது, அரசாங்கம் தலையிடக்கூடிய பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லி இதை விவாதிக்கும் பொருட்டு மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை.)

[முற்பகல் 10–20]

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சிம்கோ மீட்டர் தொழிலாளர்கள் விவகாரத்தில் ஏற்கெனவே எங்களது ஐ.என்.டி.யூ.சி. கட்சியைச் சேர்ந்த வொர்க்கர்ஸ் யூனியனைச் சேர்ந்தவர்கள் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்துள்ளனர். ஆகையினாலே எல்லா விவரங்களுக்கும் உள்ளே நான் செல்லாமல் சட்டம் ஒழுங்குப் பிரச்சனையில் மட்டும் ஓரிரு வார்த்தைகள் சொல்லி, இந்த அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவிற்கு இது எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1978 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 17 ஆம் தேதி ஐ.என்.டி.யூ.சி. தொழிற்சங்கம், சிம்கோ மீட்டர்ஸ் நிறுவனத்தில் இருந்தது. அந்தத் தொழிற்சங்கம் அந்த நிர்வாகத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. செட்டில்மெண்ட் ஏற்பட்டது. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் தேதி, அந்த ஒப்பந்தம் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையில் அமலில் இருக்க வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தில்கூட ஒரு ரெஃப்யூட் கிளாஸ் இருக்கிறது. ஆகவே, அந்த ஒப்பந்தம் சம்பந்தமாக அந்த ரெஃப்யூட் கிளாஸ் மூலமாக பேசுவதற்கு வகை இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படை படையில்.....

திரு. ரா. உமாநாத்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நாங்கள் கொடுத்து இருக்கும் அட்ஜர்ன்மெண்ட் மோஷன் டிஸ்பியூட் சம்பந்தமாக இருந்தால் ஆட்சேபணை இல்லை. அந்த மாதிரி இருந்தால் அவர் பேசுவதற்கு குறுக்கே நான் நிற்க மாட்டேன். அங்கே ரௌடிகள் தாக்கியது சம்பந்தமாக மோஷன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதையும் தாண்டி அவர் டிஸ்பியூட் சம்பந்தமாக பேச முடியும் என்றால் எனக்கும் அந்த அனுமதி வழங்க வேண்டும். ஆகவே, கொடுக்கப்பட்டிருக்கும் மோஷன் பிரேம் வொர்க்கிற்குள் அவர் பேச வேண்டும். அவர் டிஸ்பியூட் சம்பந்தமாக பேச அனுமதிக்கப்பட்டால் எனக்கும் அந்த மாதிரி அனுமதி கொடுக்க வேண்டும்.

1979 மார்ச் 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இந்த மோஷன் அனுமதிக்க வேண்டும் என்பதற்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் தயவு செய்து சொல்ல வேண்டும்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் ஒழுங்குப் பிரச்சனை கிளப்பலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்சனை எப்பொழுது வேண்டுமானாலும் கிளப்பலாம். கேள்வி நேரத்தில் நீங்கள் கிளப்புவது இல்லையா?

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: ஆகவே, அந்த ஸ்டேட்மெண்ட் அடிப்படையில் இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்ட் 23(சி)-படி லாக் அவுட் அல்லது லைடரக் செய்தால் அது சட்ட விரோதம். ஆகவே, ஒர்க்கர்ஸ் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் அமைதியாக வேலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்காக 43 கிரிமினல் வழக்குகள் இப்போது புலன் விசாரணையில் இருக்கின்றன. பல்வேறு தொழிலாளர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அந்த அளவிற்கு அவர்கள் தாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் யாரால் தாக்கப்பட்டார்கள் என்பது புலன் விசாரணையில் இருக்கிறது. நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை. ஒர்க்கர்ஸ் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் அமைதியாக வேலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது தாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் அங்கே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் அன்று மாலை சுமார் 6½ மணிக்கு சிம்கோ மீட்டர்ஸ் சாலையில் திருச்சி இந்தியன் பாங்க் காலனி அருகாமையில் எம்.டி.ஜே. 1078 என்ற ஐ.என்.டி.யூ.சி. சங்கத்தினரால் பயன்படுத்தப்படும் கார் சென்றது. அந்தக் காரைப் பார்த்து கற்கள் வீசப்பட்டு இருக்கின்றன. அந்தக் கற்களை வீசியவர்கள் வேலை நிறுத்தம் செய்து வரும் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கற்களை எறிந்ததால் அந்தக் காரில் இருந்த ஆறுமுகத்திற்கு லேசான காயம் ஏற்பட்டது. அதற்குப் பதிலாக காரில் இருந்தவர்கள் சோடா பாட்டில்களையும், கற்களையும் வீசியிருக்கிறார்கள். அப்படி வீசியபோது, மனோகர் என்பவரும், அவருடைய நண்பரும் சைக்கிளில் வந்து இருக்கிறார்கள். அவர்கள் அடிப்பட்டு இருக்கிறார்கள். அந்த சைக்கிளை தாக்கியதோடு இல்லாமல் பிடுங்கி

லா,

வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். மனோகர் கண்டோன்மெண்ட் காவல் நிலையத்தில் புகார் செய்ததன்பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதேபோல் கார் டிரைவர் அங்கப்பன் கொடுத்த புகார் பேரில் இன்னொரு வழக்கும் பதிவு செய்யப் பட்டுள்ளது. இருப்பினும் அங்கப்பனும், காரில் இருந்த மற்ற 5 பேர் மீதும் சம்பவம் நடந்த அன்றே குற்றம் சாட்டப்பட்டு காவ லில் வைக்கப்பட்டனர். காரும், அவர்கள் கைப்பற்றி இருந்த சைக்கிளும் காவல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இரண்டு வழக்குகள் சம்பந்தமாகவும் புகார் செய்த மனோகரும், அங்கப்பனும் சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் வேலை செய் யும் தொழிலாளர்கள் அல்ல. இதில் சம்பந்தப்பட்ட மற்றவர் களும் அந்தத் தொழிற்சாலை தொழிலாளர்கள் அல்ல. வழக்கு கள் புலன் விசாரணையில் உள்ளன.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டு பேசுகின்றபோது குறிஞ்சி ஓட்டலிலே ஒரு தளம் இருக்கிறது என்றும் அந்தத் தளத்திலிருந்து இந்த ஏவுகணைகள் புறப்படுகின்றன என்றும் அதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கி றார்கள் என்றும் எடுத்துச் சொல்லி, அதிலே காவல் துறை தீவிர மாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். நான் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புவது, சட்டத்திற்குட்பட்டு நிச்சயமாக காவல் துறையினர் தீவிர நடவடிக்கை எடுப்பார்கள்.

அவர்கள் மேலும் பேசும்போது அங்கே டி.எஸ்.பி.யாக இருந்த பாண்டியன் அவர்கள் இதுபோன்ற தகராறில் ஈடுபட்டார் கள்; அதனால் அவரை அங்கிருந்து மாற்றினார்கள்; ஆகவே, இருக்கின்ற அதிகாரிகளுக்கு தயக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பாண்டியன் அவர்கள் இந்தக் காரியத்திற்காக மாற்றப்படவில்லை என்றும், ஆகையால் உமாநாத் அவர்கள் பாண்டியன் இருந்தால்தான் அந்தக் காரியங்கள் நடக்கும் என் பதைப் போல ஒரு காரணத்தை உருவாக்குவது இப்போது பொறுப் பேற்றிருக்கின்ற அலுவலர்களுக்குக்கூட அது உற்சாகத்தைத் தராது என்றும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இது அரசாங்கம் எப்போதும் சொல்வதைப் போல நிர்வாக வசதிக்காக செய்யப்பட்டது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அதேமாதிரி, இப்போது பொறுப்பேற்றிருக்கிற காவல் துறை நிச்சயமாக இதில் தகுந்த நடவடிக்கை எடுக்கும். ஆகையால் இது சாதாரண சட்ட, ஒழுங்குக்கு உட்பட்ட பிரச்சனை என்பதாலும், மேலும், இது புலன் விசாரணையில் இருக்கிற காரணத்தாலும் சட்டசபையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டு மென்ற அவசியம் இல்லை.

இந்தப் பிரச்சனை விரைவில் ஒரு முடிவுக்கு வர—அந்தத் தொழில் தகராறு உட்பட—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த சுமூகமான சூழ்நிலையில் மேலும், நாம் சிக்கலாக்காமல் இருப்பது நல்லது என்று கூறி, இது குறித்து மேலும் விவாதிக்க அவசியமில்லை என்று கூறி, அமர்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : துணைத் தலைவரவர்களே, நான் இதே பிரச்சனைக் குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதற்கும் சேர்த்து பதில் சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிவிட்டார்.

திரு. கே. சௌந்திரராசன் : நான் 41 வது விதியின் கீழ் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இந்தப் பிரச்சனையை எடுத்துக்கொள்ளும்போது நீங்கள் இங்கே இல்லை. இருந்திருந்தால் உங்களுக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கும். நீங்கள் இல்லாததால் உங்கள் பெயரை சேர்க்கவில்லை.

திரு. ரா. உமாநாத் : 42-லே டிஸ்போஸ் செய்யப்பட்ட விஷயத்தை மறுபடியும் 41-லே எப்படி அனுமதிக்கப்போகிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அனுமதிக்கவில்லை. அவர் ஏற்கெனவே இருந்திருந்தால் என்றுதான் சொன்னேன். அப்போது அவர் இல்லை ; இப்போதுதான் உள்ளே வந்து உட்கார்ந்தார்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(ஆ) வக்கீல் ஒருவரிடம் காவல்துறையினர் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதாகக் கூறப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதுரை, திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் மதுரை வக்கீல் ஒருவரிடம் போலீசார் முரட்டுத்தனமாக நடந்துகொண்ட காரணத்தால்